# தி.மு.க. மீனவர் அணி

## மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

## (நான்காவது பட்டியல்)

### அணிச் செயலாளர் டாக்டர் ஏ.ஜோசப் ஸ்டாலின் அறிவிப்பு!

கழகத் தலைவர் அவர்களின் ஆணைப்படி - மாவட்டச் செயலாளர் ஒப்புதலோடு தி.மு.க. மீனவர் அணி அணியின் மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**சென்னை வடகிழக்கு மாவட்டம்**

தலைவர் - ஆர்.நவகுமார் எண். 15, 1வது தெரு, காசிகோவில்குப்பம், எண்ணூர், சென்னை-57

துணைத் தலைவர் - டி. சேகர் எண். 18, 1வதுதெரு, பெரியகுப்பம், எண்ணூர், சென்னை-57

அமைப்பாளர் - **கே. தேசிங்கு** எண்.32, எர்ணாவூர்குப்பம், எண்ணூர், சென்னை-99

துணை அமைப்பாளர்கள் - து. அல்லிமுத்து எண். 49சி, 2 வது தெரு, முகத்துவாரக்குப்பம், எண்ணூர், சென்னை - 600054 தழவை எஸ். ரஞ்சித் எண். 2, அம்மன்கோவில்தெரு, தாளங்குப்பம், எண்ணூர், கத்திவாக்கம், சென்னை-57 கே. சம்பத் எண்.97, கங்கையம்மன் கோவில் தெரு, லட்சுமிபுரம், சென்னை-99 என். கோதண்டன் 190சி, சூரபட்டுமெயின்ரோடு, புத்தகரம், சென்னை -99 ஜி. முரளி 26/28, 4வதுதெரு, தாழங்குப்பம், எண்ணூர், சென்னை-57 தே. சக்கரவர்த்தி 8,மெயின்ரோடு, பெரியகுப்பம், எண்ணூர், சென்னை-57 டி. தமிழ்செல்வன் 124, பட்டினத்தார் கோவில் தெரு, திருவொற்றியூர் குப்பம், திருவொற்றியூர், சென்னை-19 அ.து. மணி 4/222, அம்பேத்கார் தெரு, அலமாது, பி, சாந்திநகர், சென்னை-52 சீ. செல்வம், 32, 1 வது தெரு, நெட்டுக்குப்பம், எண்ணூர்-600057 எம். ரமேஷ் எண். 18, திருவொற்றியூர் குப்பம், துலுக்காணத்தம்மன் கோவில் தெரு, சென்னை-19 ஆர். குமரன் எண்.22/47, பஜனை கோவில் தெரு தாழங்குப்பம், எண்ணூர் சென்னை-600057 இரா. பிரகாஷ் எண்.21-ஏ பிளாக், திருச்சினங்குப்பம் திருவொற்றியூர் சென்னை -600019 எம்.எல். வேலன் எண். 205, திருவொற்றியூர் குப்பம், துலுக்காணத்தம்மன் கோவில் தெரு, சென்னை -19 டி. மகேந்திரன் 4, 1வது தெரு, நெட்டுக்குப்பம், எண்ணூர், சென்னை - 600057. த. தேசப்பன் 10ஏ, 2வது தெரு, இராம்மூர்த்தி நகர், எண்ணூர், சென்னை - 600057. எம்.பிரேம்குமார், 178ஏ, பட்டினத்தார் கோவில் தெரு, திருவொற்றியூர், சென்னை - 600019.

**சென்னை வடக்கு மாவட்டம்**

தலைவர் - எஸ்.கே.இளங்கோ 701/22, நாகூரான்தோட்டம், புதுவண்ணாரப்பேட்டை, சென்னை-21

துணைத் தலைவர் - டி. கருணாகரன் 19/10 தாண்டவமூர்த்தி தெரு இராயபுரம் சென்னை-13

அமைப்பாளர் - **பி. சதீஷ்குமார்,** 201, டவர்-19, எம்மார் அப்பார்ட்மெண்ட், 75, வைத்தியநாதன் தெரு, தண்டையார்பேட்டை, சென்னை-600081.

துணை அமைப்பாளர்கள் - எம். டில்லிபாபு 3/2, கிழக்கு மாதாகோயில் தெரு 7வதுசந்து, இராயபுரம், சென்னை-13 கே.சேதுராமன் 27ஏ, 6வதுமெயின்ரோடு, திருவள்ளுர் நகர், சென்னை-118 பா.கோதண்டன் எச் 3ஏ, டி.என்.எச்.பி., திருவள்ளுவர் நகர், தண்டையார்பேட்டைசென்னை-81 எ.சுரேஷ் 21 எஸ்.என்.செட்டி 1வதுதெரு காசிமேடு சென்னை-13 ஆ.ஆனந்தன் 6/7 பம்பிங்ஸ்டேஸ்சன்தெரு, இராயபுரம் சென்னை-13 ஆர். ஜெயகுமார் 9/30 காசிபுரம் பி - பிளாக் 10வதுசந்து சென்னை-21. ப. அருண் குமார், 20/60 ஜீவரத்தினம் சாலை, தண்டையார்பேட்டை, சென்னை - 600081. ப. சுரேஷ், எண் 4, ஏ பிளாக், புதுத்தெரு, கக்கன்ஜி காலனி, வியாசர்பாடி, சென்னை - 600039 கே. எம். சேகர், காசிமாநகர் 3வது தெரு, ராயபுரம், சென்னை - 600013. கே. குப்பன், எண்.30/10 ஏ, கணேஷ் காலனி, கணக்கர் தெரு, தண்டையார் பேட்டை, சென்னை - 600081. ம. நல்லதம்பி, 50, ஜீவரத்தினம் சாலை, ராயபுரம், சென்னை - 600013 ம. ஹரி இருஷ்ணன், எண் 38, காசிபுரம், பி பிளாக், 2வது தெரு ராயபுரம், சென்னை - 600013 வா. அன்பரசு, எண் 13/7, காசிபுரம், பி- பிளாக், 9வது தெரு, ராயபுரம், சென்னை - 600013 ப. பிரபாகரன், 443 ஜி எம் பேட்டை, ப.பிளாக், காசிமேடு ராயபுரம், சென்னை - 600013 கி. ரங்கராஜ், 115, கிழக்கு மாதா கோவில் தெரு, ராயபுரம், சென்னை - 600013

**திருநெல்வேலி கிழக்கு மாவட்டம்**

தலைவர் - ஜா. சதீஷ் 205/6 பி. எஸ்.பி.எஸ். தெரு, இராதபுரம்

துணைத் தலைவர் - இ. அல்போன்ஸ், 53/3, மேற்கு தெரு, உவரி.

அமைப்பாளர் - **ச. சகாயபிரபு** 18/154, வடக்குதெரு இடிந்தகரை - 6274104

துணை அமைப்பாளர்கள் - பி. அந்தோணிசெல்வம் 1/7, ராஜாதெரு, உவரி - 627651 அ. சேவியர் ஜார்ஜ் 14, ஆர். சி. தோப்பு தெரு, களக்காடு - 627501 மரியதாஸ் எஸ். டிஜோசப்தெரு, உவரி, இராதபுரம், ஜோசப் ராஜேஷ் 12/314, வடக்கு காலனி இடிந்தகரை திருநெல்வேலி அ.எம். மோகன்தாஸ் 60/4, நேதாஜிதெரு, உவரி - 627651 ஜெ.இஞ்ஞாசி 20/3, மேற்குத் தெரு, கூட்டப்புளி சே. அந்தோணிதாமஸ் 12/187ஏ, வடக்குதெரு, பெருமணல் -627106 அ. ஜான்சன் 5/13, வடக்கு தெரு, கூடுதாழை, குட்டம், இராதபுரம் இளாஸ்டன் 2/20ஏ, கோவில் தெரு, பேரின்பபுரம்,செங்குளம், பாளையங்கோட்டை. சி. வி.அந்தோணி 3/77, அந்தோணி தெரு, உவரி, பி. ராஜேஷ், 12/314 வீரப்பன் காலனி, இடிந்தகரை. சூ. டென்சிங் 5/65,வடக்குதெரு கூடுதாழை, திசையன்விளை வட்டம்

**திருவாரூர் மாவட்டம்**

தலைவர் - கா.கந்தசாமி 5/401. மேலக்காடு, ஜாம்புவானோடை, திருத்துறைப்பூண்டி வட்டம்

துணை தலைவர் - எம்.ஏ.ஹஜ்மைதீன் மேல பத்மசாலவர் தெரு, மன்னார்குடி - 614001

அமைப்பாளர் - **எஸ்.இளங்கோவன்** 11ஏ, பட்டக்காரத் தெரு, திருவாரூர்

துணை அமைப்பாளர்கள் - எம்.அக்பர் அலி 119, புதுகுடியிருப்பு, ஆசாத்நகர், முத்துப்பேட்டை - 614704 பி.பாண்டியன் 3/91, காளியம்மன் கோவில் தெரு, அம்மையப்பன், திருவாரூர். சி.இரவிச்சந்திரன் 3/30, புதுக்குடி தொண்டியக்காடு, திருத்துறைப்பூண்டி வட்டம்-614703 பி. குணசேகரன் 81, வி.ஆர்.என் தெரு,வாழச்சேரி, அத்திக்டை அஞ்சல், கூத்தாநல்லூர் வட்டம்-614013 எம். சுரேஷ் புள்ளவராயன் தோப்பு, அம்பலக்காரத்தெரு, மாத்தூர் & அஞ்சல், வலங்கைமான் வட்டம் - 612801

**கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம்**

துணை அமைப்பாளர்கள் - ஆர். சின்னதுரை, மிட்டப்பள்ளி பூவத்தி, கிருஷ்ணகிரி. ஜி. வெங்கடேசன், கனமுட்லு, அகசிப்பள்ளி, கிருஷ்ணகிரி. எ. கராமத், சேலம் மெயின் ரோடு, கிருஷ்ணகிரி நகரம், கிருஷ்ணகிரி. கே. ஆர். குமார், கண்ணகானுர், வாலிப்பட்டி, மத்தூர், கிருஷ்ணகிரி.

**தஞ்சை தெற்கு மாவட்டம்**

தலைவர் - எம்.கே.எம். அபுதாஹிர் 4-765, காசிம் அப்பா தெரு, மல்லிப்பட்டினம் - 614723, பேராவூரணி, தஞ்சை.

துணை அமைப்பாளர்கள் - எம். தஸ்தகஹிர் சம்மைபட்டினம், அம்மணிசத்திரம் பேராவூரணி - 614612. வீ. ரகு மஞ்சவயல் ரோடு, தம்பிக்கோட்டை, மறவக்காடு - 614704, பட்டுக்கோட்டை.

**புதுக்கோட்டை வடக்கு மாவட்டம்**

துணை அமைப்பாளர்கள் - ஆரோக்கியசாமி அந்தோணியார் கோவில் தெரு, இலுப்பூர், புதுக்கோட்டை. கோ. பன்னீர் வெட்டன் விடுதி, கறம்பக்குடி, புதுக்கோட்டை. சி. சின்னத்துரை 69, மேட்டுத் தெரு, அன்னவாசல், புதுக்கோட்டை. சி. ராஜேந்திரன் எஎ6, சத்தியமர்த்தி ரோடு, புதுக்கோட்டை. மா. வீரப்பன் கறம்பக்குடி, புதுக்கோட்டை. தி. அற்புதம் ஹென்றி 18, அய்யனார் நகர், புதுக்கோட்டை.

**திருவண்ணாமலை தெற்கு மாவட்டம்**

தி.மு.க. மீனவர் அணியின் திருவண்ணாமலை தெற்கு மாவட்ட அமைப்பாளராக ஏற்கனவே நியமிக்கப்பட்ட சு. பழனிவேல் அவர்கள் மறைவெய்திய காரணத்தால், **என். மாசிலாமணி,** (348, திருமஞ்சன கோபுர தெரு, திருவண்ணாமலை), அவர்கள் திருவண்ணாமலை தெற்கு மாவட்ட மீனவர் அணி அமைப்பாளராக நியமிக்கப்படுகிறார். மேலும், **சு. செந்தில்வேல்,** (55/பி, திருமஞ்சன கோபுர வீதி, திருவண்ணாமலை) அவர்கள் மீனவர் அணி மாவட்ட தலைவராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே நியமிக்கப்பட்ட மாவட்ட மீனவர் அணி நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றிட வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 24.2.2024

**டாக்டர் ஏ.ஜோசப் ஸ்டாலின்**
செயலாளர்,
தி.மு.க. மீனவர் அணி.

# நாடாளுமன்றத் தேர்தல் -2024

## ‘நாடாளுமன்றத் தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழு’ மேற்கொள்ளும்

# விரிவான சுற்றுப்பயணம்

## (திருத்தப்பட்டது)

# தலைமைக் கழக அறிவிப்பு

**தமிழ்நாடு முதலமைச்சர் - கழகத் தலைவர்** வழங்கிய அறிவுரையின்படி, 2024 - நாடாளுமன்ற தேர்தலுக்கான தி.மு.க. தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழு பிப்ரவரி 5ஆம் தேதி தொடங்கி தமிழ்நாட்டின் முக்கிய நகரங்களுக்கு கனிமொழி கருணாநிதி, எம்.பி., அவர்கள் தலைமையில் பயணம் செய்து பல்வேறு தரப்பினர், பொதுமக்கள், கழக நிர்வாகிகளைச் சந்தித்து தேர்தல் அறிக்கைக்கான பரிந்துரைகளைக் கேட்டு பெற்று வருகிறது.

கீழே குறிப்பிட்டுள்ளவாறு மாவட்டக் கழகச் செயலாளர்கள் தேர்தல் அறிக்கைக் குழுவினருடன் தொடர்பு கொண்டு தங்கள் மாவட்டத்திற்குரிய வணிகர் சங்கங்கள், விவசாயிகளின் பிரதிநிதிகள், நெசவாளர்கள், மீனவ சங்கங்கள், தொழில் முனைவோர், தொழிற்சங்கங்கள், மாணவர் சங்கங்கள், கல்வியாளர்கள், அரசு ஊழியர்களின் பிரதிநிதிகள், தொண்டு நிறுவனங்கள், கழக நிர்வாகிள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரையும் அழைத்து வந்து திமுக தேர்தல் அறிக்கைத் தயாரிப்புக் குழுவினரைச் சந்திப்பதற்கான ஏற்பாடுகளை ஒருங்கிணைக்க வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

## தேர்தல் அறிக்கை தயாரிப்புக்குழு விரிவான சுற்றுப் பயண விவரம்

## (திருத்தப்பட்டது)

| தேதி | இடம் | கழக மாவட்டம் |
|---|---|---|
| 26.02.2024 | சென்னை<br>(காலை 10.00 மணி)<br>அண்ணா அறிவாலயம்<br>கலைஞர் அரங்கம் | காஞ்சிபுரம் வடக்கு காஞ்சிபுரம் தெற்கு<br>திருவள்ளூர் கிழக்கு திருவள்ளூர் மேற்கு<br>திருவள்ளூர் மத்திய |
| 27.02.2024 | சென்னை<br>(காலை 10.00 மணி)<br>அண்ணா அறிவாலயம்<br>முரசொலி மாறன் வளாகம்) | சிறப்பு அழைப்பாளர்கள்<br>சந்திப்பு (அழைப்பு<br>விடுக்கப்பட்டவர்கள் மட்டும்)<br>சென்னை வடகிழக்கு |
| | சென்னை<br>(மாலை 3.00 மணி முதல்)<br>அண்ணா அறிவாலயம்<br>கலைஞர் அரங்கம் | சென்னை வடக்கு. சென்னை வட கிழக்கு<br>சென்னை கிழக்கு சென்னை மேற்கு<br>சென்னை தென்மேற்கு சென்னை தெற்கு |
| 02.03.2024 | தஞ்சாவூர்<br>(காலை 10.00 மணி)<br><br><br><br><br>(மாலை 3.00 மணி) | தஞ்சை வடக்கு. தஞ்சை மத்திய<br>தஞ்சை தெற்கு. திருவாரூர். நாகை.<br>மயிலாடுதுறை. திருச்சி வடக்கு. திருச்சி தெற்கு.<br>திருச்சி மத்திய. புதுக்கோட்டை வடக்கு.<br>புதுக்கோட்டை தெற்கு. விழுப்புரம். விழுப்புரம் வடக்கு.<br>விழுப்புரம் தெற்கு. கடலூர் கிழக்கு.<br>கடலூர் மேற்கு. அரியலூர். பெரம்பலூர் |

குமேற்குறிப்பிட்டுள்ள இடங்களில் கழக தேர்தல் அறிக்கை தயாரிப்புக்குழு வரும் சில நாட்களுக்கு முன்பாகவே, இக்குழு வருவதை உள்ளூர் பத்திரிகைகளில் விளம்பரப்படுத்துவதோடு, கோரிக்கை மனு பெறுவதற்கான இடவசதி உள்ளிட்ட அனைத்து வசதிகளை ஏற்படுத்த வேண்டுமென அந்தந்த மாவட்டக் கழகச் செயலாளர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள் : 24.2.2024

**தலைமைக் கழகம்**
தி.மு.க.

# கடலூர் கிழக்கு மாவட்டத்தில் திண்ணைப் பிரச்சாரம்!

### மாவட்டச் செயலாளர் - அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிவிப்பு!



*கடலூர், செப். 25 -*

தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் தளபதி அவர்களின் ஆணைக்கிணங்க, கடலூர் கிழக்கு மாவட்ட திமுக சார்பில், இன்று (26.2,2024 - திங்கட்கிழமை) அன்று மாலை முதல் 27, 28 ஆகிய மூன்று நாட்களும் மாலை 4.00 மணி முதல் கடலூர் கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட அனைத்து தொகுதிகளிலும் பாகம் வாரியாக “இல்லந்தோறும் ஸ்டாலினின் குரல்” என்ற தலைப்பில் திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகளை விளக்கும் துண்டு பிரசுரங்களை இல்லந்தோறும் சென்று வழங்கி திண்ணைப் பிரச்சாரம் மேற்கொள்ள வேண்டுமென வேளாண்மை - உழவர் நலத் துறை அமைச்சர், கழக உயர் நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர், கடலூர் கிழக்கு மாவட்ட திமுக செயலாளர், எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிக்கை வெளியிட்டுள்ளள்ளார்.

அது வருமாறு: .-

முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, கடலூர் கிழக்கு மாவட்ட திமுக சார்பில், இன்று (26.2,2024 - திங்கட்கிழமை) அன்று மாலை முதல் 27, 28 ஆகிய மூன்று நாட்களும் மாலை 4.00 மணி முதல் கடலூர் கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட அனைத்து தொகுதிகளிலும் பாகம் வாரியாக “இல்லந்தோறும் ஸ்டாலினின் குரல்” என்ற தலைப்பில் திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகளை விளக்கும் துண்டு பிரசுரங்களை இல்லந்தோறும் சென்று வழங்கி திண்ணைப் பிரச்சாரம் மேற்கொள்ள வேண்டும். திராவிட மாடல் ஆட்சியின் மூன்றாண்டு சாதனைகளையும், தமிழ்நாடு அரசின் 20242025ம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையின் சிறப்பம்சங்களையும் இல்லந்தோறும் கொண்டு சேர்க்கவும், அதே சமயம் ஒன்றிய பா.ஜ.க. அரசு தமிழ்நாட்டுக்கும், தமிழுக்கும், தமிழர்களுக்கும் செய்து வரும் அநீதிகளைத் தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொருவருக்கும் எடுத்துரைக்கவும். பிரச்சாரம் மேற்கொள்ளும்போது குடும்பத்தலைவிகளிடம், மகளிர் உரிமைத் தொகைத் திட்டம், கல்லூரி மாணவியர்களுக்கு மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் வழங்கிடும் “புதுமைப் பெண் திட்டம்”, பேருந்துகளில் மகளிர் கட்டணமில்லா பயணம், சிறார்களுக்கான காலை சிற்றுண்டித் திட்டம், மேலும் இந்த நிதி நிலை அறிக்கையில் அறிவித்த கல்லூரி மாணவர்களுக்கான மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் வழங்கும் ‘தமிழ்ப்புதல்வன் திட்டம்’, குடிசை இல்லா தமிழ் நாட்டை உருவாக்க 8 லட்சம் வீடுகள் கட்டித் தரும் ‘கலைஞரின் கனவு இல்லம்’ திட்டம், வறுமை இல்லாத் தமிழ் நாட்டை உருவாக்குவதற்காக 5 லட்சம் ஏழைக் குடும்பங்களுக்கு அனைத்து உதவிகளையும் வழங்கும் ‘முதலமைச்சரின் தாயுமானவர்’ திட்டம் என்று திராவிட மாடல் ஆட்சியின் சாதனை திட்டங்களை எடுத்துக் கூற வேண்டும்.

அதுசமயம், மாவட்ட கழக நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வார்டு, வட்டம், கிளைக் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், ஒன்றிய குழுத் தலைவர்கள், மாவட்ட ஒன்றியக்குழு உறுப்பினர்கள், நகர மன்ற தலைவர்கள், பேரூராட்சி மன்ற தலைவர்கள், ஊராட்சி மன்ற தலைவர்கள், மாவட்ட ஒன்றியக்குழு உறுப்பினர்கள், நகர, பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள், இளைஞர் அணி, மாணவர் அணி, மகளிர் அணி, இலக்கிய அணி, கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை, தொண்டர் அணி, தொழிலாளர் அணி, மகளிர் தொண்டரணி, வழக்கறிஞர் அணி, மீனவர் அணி, நெசவாளர் அணி, விவசாய அணி, விவசாய தொழிலாளர் அணி, பொறியாளர் அணி, மருத்துவ அணி, வர்த்தகர் அணி, ஆதிதிராவிடர் நலக்குழு அணி, சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு, தகவல் தொழில்நுட்ப பிரிவு அணி, சுற்றுச் சூழல் அணி, அயலக அணி, அமைப்பு சாரா ஓட்

நர் அணி, தொழிலாளர் முன்னேற்றச் சங்கம் ஆகிய அணிகளின் நிர்வாகிகள், BLA 2, BLC (பூத் கமிட்டியினர்), கழக முன்னோடிகள், கழக தோழர்கள் அனைவரும் கழகத் தலைவர் தளபதி அவர்களின் குரல் டெல்லியிலும் நிறைவேறுவதை உறுதிசெய்திடும் வகையில் சிறப்பாக பணியாற்றுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## திருவொற்றியூரில் பெ.சித்தானந்தம் படத்திறப்பு!

*சென்னை, பிப். 26-*

திருவொற்றியூர் தி.மு.க. வரலாற்றில் முக்கியமானவராக திகழ்ந்த பெ. சித்தானந்தம் அவர்களின் எட்டாம் ஆண்டு நினைவு நாள் 22.2.2024 அன்று காலை சிறப்பாக அனுசரிக்கப்பட்டது.

முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் டி.கே.பழனிச்சாமி நகர மன்றத் தலைவராக இருந்த போது நகர மன்ற உறுப்பினராக, தி.வ.விசுவநாதன் நகர மன்றத் தலைவராக இருந்த போது நகர மன்ற துணைத் தலைவராக ஐந்தாண்டுகள், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் டி.சி.விஜயன் நகர் மன்றத் தலைவராக இருந்தபோது நகரமன்ற உறுப்பினர், மறைந்த மீன் வளத்துறை அமைச்சர் கே.பி.பி.சாமி அவர்களோடு இணைந்து பல்வேறு கால கட்டத்தில் இயக்கப் பணியாற்றியவர் என நகர மன்ற உறுப்பினரில் மூன்று முறை தொடர் வெற்றி கண்டவர். நகரக் கழகத்தில் பல்வேறு பொறுப்புகளை வகித்தவர்.

நிகழ்ச்சியில் அனைவருக்கும் காலை உணவு வழங்கப்பட்டது. நிகழ்ச்சி ஏற்பாடுகளை பெ.சித்தானந்தம் மகன் பி.எஸ்.விவேக், சித்தானந்தம் துணைவியார் திருமதி அருண்மொழி மற்றும் குடும்பத்தார் செய்திருந்தனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### குளித்தலை இளமுருகு
### பிப்ரவரி 26 (2000)



திராவிட இயக்கத்தின் வளர்ச்சியிலே அடிநாள் தொட்டு அக்கறையோடும் ஆர்வத்தோடும் ஈடுபாடு கொண்டு உழைத்தவர்.

தலைவர் கலைஞர் அவர்களின் ஆரம்பகாலத் தோழர்களில் ஒருவர்.

தலைவர் கலைஞர் அவர்கள் 1957ல் குளித்தலை சட்டமன்றத் தொகுதியில் போட்டியிட்டபோது வெற்றிக்கு அடித்தளமாக இருந்து உழைத்தவர்களில் இவரும் ஒருவர்.

காதல் கலப்புமணம் செய்தவர். ஆண்பெண் சம உரிமையை நிலைநாட்டிட வேண்டுமென்பதற்காகவே தன் பெயரோடு தன் மனைவியின் பெயரையும் இணைத்துக் கொண்டு “இளமுருகு பொற்செல்வி” என்றே தம்மை அழைத்துக் கொண்டவர்.

1991ஆம் ஆண்டு நடைபெற்ற முப்பெரும் விழாவில் தலைவர் கலைஞர் அவர்கள் இவருக்கு ‘அண்ணா’ விருது வழங்கிச் சிறப்பித்துள்ளார்.

“கழகத் தொண்டர்கள் உள்ளத்தில் வரலாற்றுச் சிறப்போடு வாழ்பவர்” என தனது இரங்கல் செய்தியில் தலைவர் கலைஞர் தெரிவித்துள்ளது சிறப்பாகும்.

**தலைமைக் கழகம்**
தி.மு.க.